விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 23 ஸபர் 14 இதழ் 267
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 8-11-84

## 83 ஜூலை கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் நிவாரணம் கிடைக்கும்

(கொழும்பு)

கடந்த வருடம், ஜூலை கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் நிவாரணம் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது,

வெளிநாட்டு உதவியுடன், அரசாங்கத்தின் நிதியிலிருந்து தனது பங்களிப்பாக 79 லட்சம் ரூபாவை மேலதிகமாக ஒதுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் மேற்படி திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜூலை கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படவிருக்கும் விசேட திட்டங்கள் வருமாறு.

○ கலவரத்தில் கணவனை இழந்த விதவைக்கு பத்தாயிரம் ரூபாவும், அந்தக்குடும்பத்தின் நான்கு பிள்ளைகளுக்கு தலா ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

○ கொலையுண்டவர் குடும்பத்தில் வருடம் முப்பதினாயிரம் ரூபா வருமானம் தேடிக் கொடுக்கும் கணவர் கொலை செய்யப்பட்டால், அந்தக் குடும்பத்துக்கு ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்படும்.

(8ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## 'ஜனநாயகம்' கவிழ்ந்தது; 'குடியரசு' வென்றது!

# சரித்திரக் கதாநாயகன் றீகன்!

# மொன்டேல் படுதோல்வி

### 50 மாநிலங்களில் 49 றீகன் வசமானது!

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் நாற்பத்தோராவது ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் திரு. றொனல்ட் றீகன் (73 வயது) அமோக வெற்றியீட்டி, புதிய சாதனை ஏற்படுத்தி, அமெரிக்கச் சரித்திரத்தின் கதாநாயகனாகிவிட்டார்!

அமெரிக்காவின் மொத்த ஐம்பது மாநிலங்களிலும் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திரு. றீகன் நாற்பத்தொன்பது மாநிலங்களில் வெற்றிவாகை சூடியுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயககட்சி வேட்பாளர் திரு.வோல்டர் மொன்டேல் (56 வயது) ஒரேஒரு மாநிலத்தில் மட்டும் வெற்றிபெற்று படுதோல்வி கண்டுள்ளார்!

(8-ம் பக்கம் 4-ம் கலம் பார்க்க)

### இலங்கையர் விடுதலை

(லண்டன்)

மொஸாம்பிக்கில், விடுதலை இயக்கத்தினரால் கடத்தப்

[5ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

## 'அந்த' வீடு முற்றாக தகர்க்கப்பட்டது!

(நல்லூர்)

கச்சேரி நல்லூர் வீதியில் நேற்று நண்பகல் நடைபெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து 'அந்த'ப் புதியமாடி வீடு நேற்று மாலை ஐந்தரை மணியளவில் வெடித்த குண்டினால் முற்றாகத் தகர்க்கப்பட்டது!

கச்சேரி-நல்லூர் வீதியில், ஒரு ஒழுங்கையில், பிரதான வீதியிலிருந்து சுமார் இருபது யார் தூரத்திலிருக்கும் மேற்படி மாடி வீட்டில்தான் நேற்று நண்பகல் குண்டு வீச்சுச் சம்பவமும், அதனைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகமும், பின்னர் தேடுதல் வேட்டையும் நடந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்படி நண்பகல் சம்பவத்தைத் தொடர்ந்து அயலில் உள்ளவர்கள் வேறுஇடங்களுக்குச் சென்றுள்ளனர்,

## கச்சேரி - நல்லூர் வீதியை 'நடுங்க'வைத்த சம்பவம்!

(கல்வியங்காடு)

கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள குறுக்கு ஒழுங்கை ஒன்றிலுள்ள வீடொன்றை 5 வாகனங்களில் வந்த ஆயுதப் படையினர் நேற்று நண்பகல் சோதனையிட்டபோது பலத்த சத்தத்துடன் குண்டொன்று வெடித்தது!

இக்குண்டு வெடிப்பைத் தொடர்ந்து தொடர்ச்சியாக துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டதாகக் கூறப்படுகிறது.

இராசா என்பவருக்குச் சொந்தமான இச்சிறிய வீடு

(5ம் பக்கம் 4ம் கலம்பார்க்க)

## பிரபல குற்றவாளி 'ஸ்ரீ' சுட்டுக் கொலை!

(மட்டக்களப்பு)

பிரபல குற்றவாளி - 'கேடி'யான 'ஸ்ரீ' என்று அழைக்கப்படும் ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று முன்தினம் ஏறாவூர் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த நபர் கரடியனாறு பகுதியில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் இதுவரை மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதிகளில் ஐம்பதுக்கும் அதிகமான வழிப்பறி, கொள்ளை, மோட்டார் சைக்கிள் கடத்தல் ஆகிய வற்

[5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

## பிறவி ஊமை துப்பாக்கிச்சூட்டுக்குப் பலி!

### உரும்பராயில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

உரும்பராய்வடக்கில் நேற்று முன்தினமிரவு பிறவி ஊமையான சந்திரகுமார் என்ற 17 வயது இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

யாழ் மேலதிக நீதவான் கே பி எஸ் வரதராசா மரண விசாரணை நடத்தினார்.

பருத்தித்துறைடிப்போவைச் சேர்ந்த கண்டக்டர் தவராசா

(5-ம் பக்கம் 4ம் கலம்பார்க்க)

## எம். ஜி. ஆர் உடல்நிலை

(நியூயோர்க்)

நியூயோர்க் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரனின் உடல்நிலை திருப்திகரமாக இருப்பதாக நேற்றிரவு வெளியிடப்பட்ட வைத்திய அறிக்கை தெரிவித்தது.

### மாவட்ட அடிப்படையில்

## 800 வங்கி ஊழியர் சேர்க்கப்படுவர்!

(கொழும்பு)

800 புதிய வங்கி ஊழியர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள் தெரிவுப் பரீட்சை மூலம் இவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 20 பேர் வீதம் தகுதி அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்படுமென்று அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

## "ரஜீவையும் கொலை செய்திருப்பேன்!"

### இந்திராவை சுட்டவர் கூறுகிறார்

[புதுடில்லி]

''இந்திராகாந்தியுடன் அவர் மகன் ரஜீவ் காந்தியும் உடன் இருந்திருந்தால், அவரையும் சுட்டுக்கொன்றிருப்பேன்'' என்று சத்வன் சிங் விசாரணையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தச்செய்தியை 'ஸ்ரேற்ஸ்மன்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இந்திராவின் பாதுகாப்பு வீரர்களில் ஒருவரான சத்வன் சிங் இந்திரா சுடப்பட்ட மறுகணம் பிடிக்கப்பட்டார்.

இவர் ரஜீவையும் கொலை செய்யத் திட்டமிட்டதாகச் சொன்னார்.

### இலங்கைத் தமிழர் பிரச்னை:

## ரஜீவ் காந்தி அக்கறையுடன் விசாரித்து அறிந்தார்

### 'அமிர்' தகவல்

புதுடில்லி, நவ. 7

இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து இந்தியாவின் புதிய பிரதமர் திரு ரஜீவ் காந்தி தம்மிடம் அக்கறையுடன் விசாரித்து அறிந்து கொண்டதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்தும் இன்னலுக்குள்ளாக்கப்படுவதாகத் தாம் திரு ரஜீவ் காந்தியிடம் எடுத்துக்

(5-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் உடனடி விற்பனைக்குண்டு, விலை குறைவு. சீமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் வீதி, மயிலங்காடு, சுன்னுகம். 600

38 Sri தொடர் இலக்கமுடைய Toyota—Hiace Van விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். செ. குமரகுரு, சிவபுரவீதி, வல்வெட்டித்துறை. 604

விவசாய திணைக்களத்தினுல் சிபார்சு செய்யப்பட்ட தக்காளி, கத்தரி (S. M. 164; யாழ். ஊதா). மிளகாய்(MI 1, MI 2), கறி மிளகாய், நாற்றுக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், ஸ்ரேஷன் ரேட், மருதனுமடம். 621

கோழி வளர்ப்பவர்களுக்கு எங்களிடம் தரமான அரிசி குறுணல் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விஜிதா அரிசி ஆலை, பத்திரகாளி கோவிலடி, தாவடி தெற்கு, கொக்குவில். 626

ஸ்ரான்லி கஸ்தூரியார், ஆஸ்பத்திரி வீதிகளில் கடைகள் காலியான நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 78, அரசடி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22484. 628

கைப்பிக்கோ இனத்தைச் சேர்ந்த 6 மாத முட்டையிடும் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஞானப்பிரகாசம், 123, ஸ்ரேசன் ரேட், யாழ்ப்பாணம். 632

## தேவை

பிடவை விற்பனையில் அனுபவமுள்ள ஆண்கள் தேவை. விண்ணப்பிக்கவும். அண்மையில் இருப்பவர் விரும்பத்தக்கது. அஜந்தாஸ், 54, பெரிய கடை, யாழ்ப்பாணம். 623

இறைச்சிக்கோழிகள் தேவை. (Broiler) இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். அண்ணு பாம், இணுவில். 595

வெளிநாட்டில் வேலைபார்க்கும் மது, மாமிச, புகைத்தல் பழக்கமற்ற இந்து உயர் வேளாள இனத்தைச் சேர்ந்த 27வயதுநிரம்பிய 8ல்செவ்வாய் இராசியுள்ள, உயர்தரம்வரை படித்த மணமகனிற்கு அதே இனத்தைச் சேர்ந்த 25வயதிற்குட்பட்ட படித்த நல்ல அழகும், குணமும் வாய்ந்த மாமிசம் உண்ணுத மணமகள் தேவை. பெண்ணின் பிறந்த திகதி, குடும்ப விபரம், அண்மையில் எடுத்த முழு உருவப் புகைப்படம், குறிப்பு ஆகியவற்றுடன் பெண்ணிற்கு கொடுக்கக் கூடிய முழு சீதன விபரத்துடன் விண்ணப்பிக்கவும். யாவும் திருப்பி அனுப்பி வைக்கப்படும். விளம்பர இல; 581, C/o, ஈழநாடு. 581

## வாடகைக்கு

பெரியகடை அருகில் நாவலர் வீதி கஸ்தூரி வீதிச் சந்தியில் பெரியவியாபாரிகளுக்கேற்ற விசாலமான மேல்மாடி ஸ்ரோர். அத்துடன் கீழே பிரபல வியாபாரக் கடையும் வாடகைக்குண்டு. 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 22335. 617

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு மிகக் கிட்டடியில் மாணவிகளுக்கு அறைகள் சாப்பாட்டுடன்/சாப்பாடில்லாமல் உண்டு. 148, சேர்.பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். 633

கொக்குவில் கே. கே. எஸ் வீதி, 3-ம் கட்டையடியில் சகல வசதிகளும் அடங்கிய வீடு வாடகைக்குண்டு. கு.பாலசுந்தரம், 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P. 22454. 622

ஆஸ்பத்திரி வீதியில் கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: 78, அரசடி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22484. (629)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் சிவலிங்கப் புளியடிக்கும் இடையில் எனது அடையாள அட்டை (இல. 493271 229V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மு. தயாபரன், 31, ஒட்டுமடம் ரேட், வண்ணார்பண்ணையில் அல்லது முத்துலிங்கம், உரும்பிராய் தெற்கில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 616

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், கோயில் ரேட், இல. 86-ல் வசித்தவருமான காலஞ்சென்ற சுவாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை என்பவரின் மரணச்சொத்து சம்பந்தமான விடயத்தில்.

மரணித்தவர் சுவாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை கைம்பெண், ஆன் யெசி ஜெயராணி, இல. 86, கோவில் ரேட், யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல.3836

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு. அதில் அதற்கிணங்க முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ம் திகதியாகிய இன்று.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்

5 3

# துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இளைஞர் சடலம்!

[வவனியா]

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலமொன்றை இராணுவத்தினர் வவனியா ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்துள்ளனர்

நேற்று நண்பகல் உழவு யந்திரம் ஒன்றில் இராணுவத்தினர் இச்சடலத்தை எடுத்து வந்தனர்.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இவ்விளைஞர் சாரமும் ஷேர்ட்டும் அணிந்திருக்கக் காணப்பட்டார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் காலைஇராணுவத்தினர் பாலமோட்டை என்னும் கிராமத்தைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

## தமிழ்மொழி பயிற்சி பரீட்சை

(கல்வியங்காடு)

ஏற்கனவேதிட்டமிடப்பட்ட பிரகாரம் 'தமிழ் மொழிப் பயிற்சிப் பரீட்சை' 7-ம் திகதி நாடு பூராவும் நடாத்தப்பட்டது.

ஆரிய-திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் வருடா வருடம் க. பொ சா. தர மாணவர்களுக்கு இப்பரீட்சையை நடாத்துகின்றது.

மேற்படி பரீட்சை திட்டமிடப்பட்ட பிரகாரம் நடந்து முடிந்ததென இச்சங்க செயலாளரும் யாழ். மாவட்ட பிரதம கல்வி அதிகாரியுமான திரு. வி. சபாநாயகம் தெரிவித்தார்.

## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில், வின்ஸர் சந்திக்கு அருகாமையில், கடை ஒன்று காலியான நிலையில் விற்பனைக்கு உண்டு. முழு விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

R. பாலசுப்பிரமணியம்,
சட்டத்தரணி,
இல: 52, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி இல: 22334 (583)

## BECON STUDY CENTRE

(ஸ்ரீதர் முன்பாக)

DAY CLASS

நடை பெறுகின்றது

தூயகணிதம்:- தொடர், நுண்கணிதம்

பிரயோக கணிதம்:- எறியம், உராய்வு

ஆசிரியர்;

A. பத்மநாதன்

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள், நல்லூர் இந்து விடுதிக்குத் தெற்குப் புறமாகவுள்ள கடைகள் ஆகியவற்றை 01-01-1985-ந் திகதி முதல் குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 22-11-84-ந்திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணையும் செலுத்துவதன் பேரில் 21-11-84-ந்திகதி புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிவரையும் வழங்கப்படும் இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கேள்விப்படிவங்களை யாழ்ப்பாணமாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும், அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளருக்கு 22-11-84-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.

இக்கேள்விகள் சம்பந்தமான இதர விபரங்களை மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 05-11-84.

### அட்டவணை

| | குத்தகையின் விபரம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித்தொகை | குத்தகைக் காலம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்விப் பிணை |
|---|---|---|---|---|---|
| 1. | பெரியகடை மரக்கறிச்சந்தை | ரூபா 127701-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 2000-00 |
| 2. | செங்குந்தாச் சந்தை | ரூபா 151030-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 2000-00 |
| 3. | குருநகர் சந்தை | ரூபா 167024-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 2000-00 |
| 4. | முற்றவெளிமீன்சந்தை | ரூபா 102600-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 2000-00 |
| 5. | நாவாந்துறைச்சந்தை | ரூபா 44050-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 2000-00 |
| 6. | பாஷையூர் சந்தை | ரூபா 25100-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 2000-00 |
| 7. | பண்ணை மீன்சந்தை | ரூபா 19500-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 2000-00 |
| 8. | அரியாலை புதிய சந்தை | ரூபா 9001-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 250-00 |
| 9. | கொழும்புத்துறை சந்தை | ரூபா 1111-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 250-00 |
| 10. | நவீனசந்தை துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | ரூபா 30200-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 2000-00 |
| 11. | நூலக துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | ரூபா 2778-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 250-00 |
| 12. | முற்றவெளி மீன்சந்தை துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | ரூபா 2215-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 250-00 |
| 13. | பண்ணை மீன்சந்தை துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | ரூபா 1636-00 | ஒரு வருடம் | ரூபா 50-00 | 250-00 |
| 14. | நல்லூர் நிரந்தரக்கடைகள் இல. 3, 4, 11 | ரூபா 15000-00 | ஐந்து வருடம் | ரூபா 50-00 | 1500-00 |

(624)

## இந்திரா மறைவுக்கு ஐ. நா. வில் அணிசேரா நாடுகள்

# குழுக்கூட்டம் ஆழ்ந்தகவலை!

ஜெனிவா நவ, 7

ஐ. நா. சபையின் அணிசேரா நாடுகள் விசேட குழுக்கூட்டம் மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையையும் தெரிவித்துக் கொண்டது.

இக்குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது திருமதி இந்திரா காந்தியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

''உலகத்தில் சுதந்திரத்துக்காகவும் ஜனநாயக விடுதலைக்காகவும் பாடுபட்ட தலைவர் இந்திரா காந்தியின் இழப்பு அணிசேராநாடுகளுக்கு ஏற்பட்ட பலத்த அடியாகும், ஆயினும் இயக்கத்தின் ஒற்றுமையை கட்டிக்காத்து அதனைச் சிறந்தமுறையில் நிறைவேற்றுவது தான் நாம் அவருக்குச்செய்யும் தொண்டாகும்'' என்றுகூட்டத்தில் பேசிய பல நாட்டுத் தலைவர்களும் தெரிவித்தனர்.

புதிய பிரதமர் திரு. ரஜீவ் காந்தியின் தலைமையில் மறைந்த தலைவி விட்டுச் சென்ற அணிசேரா இயக்கத்தைப் பாதுகாப்போம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (சூ)

## மாணவர்களிடம் மன்னிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கொள்ளையடிக்கப்பட்ட 'புரேஜெக்டர்' கருவி அண்மையில் கல்லூரி வாசலின் முன் வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கருவியுடன் ஒருகடிதமும் வைக்கப்பட்டிருந்தது. அக் கடிதத்தில் ''மேற்படி சம்பவத்துக்காக பாடசாலை மாணவர்களிடம் மன்னிப்பு கோருகின்றேம்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

## முன்னாள் சட்டசபை உறுப்பினர் வைத்திலிங்கம் காலமானர்

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் சட்டசபை உறுப்பினர் திரு.எஸ்ரி.வைத்திலிங்கம் காலமானர். இறக்கும் போது அவருக்கு 81 வயதாகும்.

இவர் 1931ம் ஆண்டு முதல் 1847ம் ஆண்டு வரை சட்டசபை உறுப்பினராகப் பதவி வகித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் செயலாளரான இவர் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆலோசகராகவும் கடமையாற்றினர்.

ரேட்டறிக் கழகத்தின் முக்கிய உறுப்பினராகவும் இவர் விளங்கினர்.

திய பாராளுமன்றத் திறப்பு விழாவில் ஜனதிபதிஜெயவர்த்தன இவரைப் பற்றி குறிப்பிடுகையில்:

''தற்போது உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஓரேயொரு முன்னாள் சட்டசபைஉறுப்பினர் இவர்'' என்று கூறினர்

புதிய பாராளுமன்றத் திறப்பு விழாவிற்கு இவருக்கு முறைப்படி அழைப்பு அனுப்பப்படாததால் அந்த வைபவத்திற்குப் போக இவர் மறுத்து விட்டார் (இ-வெ)

## சென்னையில் இந்திரா அஸ்திக்கலசம்:

# பெரும்திரளான மக்கள் அஞ்சலி

சென்னை, நவ. 7

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அஸ்திக் கலசம் சென்னை ராஜாஜி மண்டபத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்களுக்கு அஸ்திக் கலசம் இங்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

பெருந்திரளான மக்களும், பாடசாலைச் சிறுவர்களும் நேற்று மறைந்த பிரதமரின் அஸ்திக்கு அஞ்சலி செலுத்தினர். தமிழ்நாடு ஆளுநர் திரு. எஸ். எல். குரானவும் அஞ்சலி செலுத்தினர். (வெ)

## இந்திரா அஞ்சலியின் எதிரொலி:

# 100 லொறி நிறைந்த வாழை, தென்னை!

### யாழ். நகரில் அகற்றும்வேலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தில் சுமார் 100 லொறி நிறைந்த வாழை, தென்னை, மரங்கள் வீதியோரங்களில் குவிக்கப்பட்டிருப்பதாகவும், இவற்றை அகற்றும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், யாழ். மாநகரசபை சுகாதாரப்பகுதியினர் தெரிவித்தனர்.

பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் மறைவையொட்டி வீதிகளில் கட்டப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான வாழை, தென்னைகள் நேற்று வீதியோரங்களில் குவிக்கப்பட்டிருந்தன.

நேற்றுமுன்தினம் முதல் வீதிஓரங்களிலுள்ள வாழை, தென்னைகளை அகற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க)

# ஜனதிபதி தேர்தல்

(முன்வந்த செய்தி)

வாஷிங்டன், நவ. 7

**அமெரிக்க ஜனதிபதித் தேர்தலில் ஜனதிபதிதிரு.றெனல்ட்றீகன் முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு இலங்கை நேரப்படி இன்று அதிகாலை முடிவடைந்தது.**

அமெரிக்க ஜனதிபதித் தேர்தலில் திரு. றெனல்ட் றீகன் ஆரம்பத்திலேயே முன்னணியில் இருப்பதாக அமெரிக்காவின் பிரதான தொலைக்காட்சி சேவைகளில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. றீகன் ஐந்து மாநிலங்களில் வெற்றியீட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அமெரிக்க ஜனதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் திரு றீகனுக்கும், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் திரு. வோல்டர் மொன்டேலுக்கு மிடையில் கடும்போட்டி நிலவுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

அமெரிக்க ஜனதிபதித் தேர்தலில் திரு. றீகன் அமோக வெற்றிபெறுவாரெனத் தற்போது ஹேஷ்யம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## பூநகரியில் ஊர்வலம்

[முழங்காவில்]

திருமதி இந்திரா காந்தியின் மறைவையொட்டி அனுதாபம் தெரிவிக்குமுகமாக பூநகரிப் பகுதியில் வாழும் சுமார் 1000 பேர் மௌன ஊர்வலமாக வந்து பூநகரி வாடியடியில் உள்ள சந்தை மைதானத்தில் இரங்கல்கூட்டம் நடாத்தினர்.

## விசாரணையின்பின் விடுதலை

(கல்வியங்காடு)

கச்சேரி - நல்லூர் வீதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவன் மகாதேவா சகாதேவனும், கல்வியங்காடு டயர் கடையில் வேலைசெய்யும் நடராசா ரவீந்திரதாசனும் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

## எம். ஜி. ஆருக்கு

# சிறுநீரகம் வழங்க சிவாஜி முன்வந்தார்

சென்னை, நவ. 7

நியூயோர்க் புறூக்கன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கு தமது சிறுநீரகத்தை வழங்க பிரபல நடிகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. சிவாஜிகணேசன் முன்வந்தார்.

இவருடன் பெருந்தொகையான மக்களும் தமது சிறுநீரகங்களை திரு. ராமச்சந்திரனுக்கு வழங்க முன்வந்தனர்.

திரு ராமச்சந்திரனின் சகோதரனின் புதல்வன், புதல்வியரது சிறுநீரகமே அவருக்குப் பொருந்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## "அனைத்துலகுக்கும் பேரிழப்பு"

(நெடுந்தீவு)

''இந்திய மக்களின் நலனுக்கும் அணிசேரா நாடுகளின் உயர்வுக்கும் உலகசமாதானத்திற்கும் பாடுபட்ட பாரதப் பிரதமர் அன்னை இந்திராவின் மறைவு அனைத்துமக்களுக்குமே ஒரு பேரிழப்பாகும்''

இவ்வாறு நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையின் குருவண. டானியல் தியாகராசா கூறினர்.

நெடுந்தீவு மக்களால் ஒழுங்குசெய்யப்பட்ட மாபெரும் அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமையுரை நிகழ்த்திய பங்குத்தந்தை அருட்திரு சகாயநாயகம் அடிகளார் ''அன்னையின் மறைவு மனித குலத்தின் பாதுகாப்புக்கு எதிராக விடுக்கப்பட்ட ஒரு சவாலாகும் தமிழ்மக்கள் தமக்குக் கிடைத்த ஒரு துணிவான காவலரை இழந்துவிட்டார்கள்.' என்று கூறினர்

நெடுந்தீவு பல. நோ. கூ. சங்க தலைவர் திரு நா. இராமச்சந்திரன் ''துணிவும் நேர்மையும் மக்களுக்காகவே வாழ்ந்த மகோன்னதமான தலைவியை உலகம் இழந்து விட்டது'' என்றார்.

அஞ்சலிக் கூட்டத்திற்கு முன்னதாக நெடுந்தீவு கிழக்கு புனித சவேரியார் ஆலயத்தில் விசேட பிரார்த்தனையுடன் சுமார் ஒருமைல் நீளமான ஊர்வலமும் இடம் பெற்றது.

# கொலைஞர்களின் நெருங்கிய உறவினர்கள் விசாரணை

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைக் கொலை செய்த இரு கொலைஞர்களின் தந்தையர்ளும், சகோதரர்களும், நெருங்கிய உறவினர்களும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சண்டிகாரிலுள்ள சப் இன்ஸ்பெக்டர் பான்சிங்கின் இல்லத்தை இருமுறை முற்றுகையிட்ட பொலிசார் அவருடைய மூன்று சகோதரர்களான சாம்லர்சிங், கிரிபால்சிங், பகத்சிங் ஆகியோரை விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

பான்சிங்கின் தந்தையான சுச்சாசிங்கும் பொலிசாரினல் பின்னர் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

பான்சிங்கினல் தனது தந்தைக்கும், சகோதரர்களுக்கும் எழுதப்பட்ட சில கடிதங்களையும் பொலிசார் விசாரணைக்காக எடுத்துச்சென்றுள்ளனர். குர்டாபூரில் எட்டுப் பேர் விசாரணைக்காகப் பொலிசாரினல் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 6பேர் சத்வான்சிங்கின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர் என்று கூறப்பட்டது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை அவரின் சீக்கிய மெய்ப்பாதுகாவலர்களான பான்சிங்கும், சத்வான் சிங்கும் சுட்டுப்படுகொலை செய்ததாக அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

## திருமுறை மன்றத்தின் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் பாரத அன்னை ஸ்ரீமதி இந்திரா காந்தியின் மறைவையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை, சனிக்கிழமைகளில் உண்ணவிரதம் அனுஷ்டித்ததுடன் ஆத்மசந்தி பிரார்த்தனைக் கூட்டமும் நடத்தினர். 3-ம் திகதி சனிக்கிழமை அன்னை இந்திராவின் படத்துடன் திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ வாலை அம்மன் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக பல ஆலயங்களுக்குச் சென்று கூட்டு வழிபாடு செய்தனர். (ப)

# "ஈழத்தமிழர்களுக்கு பாதுகாப்பளித்தவர்"

## எம். ஜி. ஆர். பிரார்த்தனை கூட்டத்தில் உரை

[வண்ணார்பண்ணை]

''உலகத்தமிழ் இனத்திற்கு இன்னல் வரும்போது குரல் கொடுத்துவந்த தமிழ்த் தலைவர்களில் முன்வரிசையில் திகழ்ந்த எம் ஜி. ராமச்சந்திரன் ஈழத்தமிழ் இனத்திற்கு பாதுகாப்புக்கொடுப்பதில் தனது சிந்தனை முழுவதையும் செலவு செய்தர். ஈழத்தமிழ் இனத்தைப்பற்றி திருமதி இந்திரா காந்தி மிகுந்த அக்கறை உள்ளவராக இருந்தார்.''

இவ்வாறு மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநயகர் ஆலயத்தில், தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனின் உடல்நலம் பெற வேண்டி நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் கோப்பாய் எம். பி திரு மு. ஆலாலசுந்தரம் தெரிவித்தார்.

மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் நடந்த இவ் வைபவத்தில் பொதுமக்கள் அதிகளவில் கலந்து கொண்டனர்.

மேற்படி கி. அ. சங்கத்தின் தலைவர் திரு கா. குலசிங்கநாதன் தலைமையில் நடந்த இந்த பிரார்த்தனை வைபவத்தில் அ. தி மு க. யாழ் கிளைச் செயலாளர் பொன். மதிமுகராசா உட்பட பலர் உரையாற்றினர்.

# வேலணை கொலைவழக்கு எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கொலைவழக்கில் எதிரி விசாரணை நடுவில் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் வேலணையில் 79, மே 29-ந் திகதி ஏ. சிறிஸ்கந்தராசாவை கொலை செய்ததாக ரி. பாஸ்கரன்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி கே வி. நவரத்தினப் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவின் அனுசரணையுடன் ஆஜரானர். அரச தரப்பில் சட்டத்தரணி கே. ஸ்ரீஸ்கந்தராசா ஆஜரானர். (க)

### மணிவாக்கு

யானம் என்பது ஆன்மாவின் கண்ணாடி. அதன் வழியே மனிதன் இறைவனைத் தன்னருகில் காண்கிறான்.

— பிரெஞ்சுப்புலவன் லாவன்டைன்

## நமது நோக்கு

### என்கோர், ஜனாதிபதி

அமெரிக்காவின் நாற்பத்தோராவது ஜனாதிபதியாக அபரிமிதமான வெற்றி பெற்றிருக்கும் திரு. ரொனல்ட் றீகனை வரவேற்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

உலக வரலாற்றில் 200 ஆண்டுகடந்த ஐக்கிய அமெரிக்கா முதன்மைபெற்றிருப்பதை நினைவுகொண்டு மீண்டும் ஜனாதிபதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியாகையால் 'என்கோர்' என்று குறிப்பிட்டிருக்கிறோம். மக்கள் ஜனாதிபதிக்கு இரு தடவை கொடுப்பது பொதுவான வழக்கம்.

யாழ்ப்பாணத்தில் நாடக மேடையிலோ அல்லது இசை அரங்கிலோ ஒரு பாடகர் மிகச் சுவையாகப் பாடி கேட்போரை மகிழ்வித்தாரானால் அவர் மேடையை விட்டு வெளியேறும்போது 'என்கோர்' என்ற கோஷம் எழுப்புவது கடந்தகால நிகழ்ச்சி.

சுமார் 50 வருடத்திற்கு முன் இங்கு வழக்கத்திலிருந்த இப்பரிபாஷை இக்காலத்தில் மறைந்துவிட்டபோதும், ஜனாதிபதி றீகனை—பிரபலம்பெற்ற சினிமா நடிகரை—அமெரிக்க மக்கள் 'இன்னொருமுறை' என்று வரவேற்கும்போது 'என்கோர்' புத்துயிர் பெறுவது பொருத்தமானது.

தேர்தல் போட்டியில் நாளுக்கு நாள் பொதுஜன 'நாடி' வேறுபட்டபோதும் ஜனாதிபதி றீகனுக்கே கூடிய ஆதரவு என்பது சந்தேகத்துக்கு இடமாகவில்லை.

அவருடைய முதலாவது ஆட்சியின் இடைப்பகுதியில் பல துறைகளிலும் மாறான கண்டனம் கிளம்பியது தெரிந்ததே. முக்கியமானது தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி, இதற்குப் பக்கபலமாக ஜனாதிபதி கடைப்பிடித்த மிகக் கடுமையான வெளிவிவகாரக் கொள்கைகள். சோஷலிச நாடுகளின் பொது எதிரியென்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

உலகைப்போருக்கு இழுக்கின்றாரென்ற குற்றச்சாட்டு உள்நாட்டிலே எழுப்பப்பட்டது. இவ்வாறு சூழ்நிலை மாறாக இருந்தபோதும் எதனையும் உடனுக்குடன் சமாளிக்கும் திறன் அவருடைய நீண்ட அனுபவத்தால், மக்கள் தொடர்பால் விருத்தியடைந்தது.

இவ்விசேட திறனை நன்றாகப் பிரயோகித்து வரும் வேளையில், உலக சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டது. பொருளாதார மீட்சி உலக விவகாரங்களில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவெனலாம்.

பொருளாதாரம் சீரடைந்து வரும்வேளையில், எங்கு எவரை எவ்வாறு வெருட்ட வேண்டும், வளைக்க வேண்டும் என்ற சிறப்புச் சாதுர்யம் கொண்டவர் றீகன். ஆதலால், தமக்குச் சார்பாக மாறிவரும் சமூகச் செல்வாக்கை நன்றாகப்பயன்படுத்திக்கொண்டார்; வெற்றிக்கு இதுவே அடிப்படைக் காரணம்.

அமெரிக்க ஜனாதிபதி ஒருவரின் அதிகாரம் அவருடைய ஆட்சிக்காலத்தில் உலகின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஒரு தனிமனிதனின் பேரதிகாரமெனக் கொள்ளலாம்; கம்மியூனிஸ்ட் ரஷ்யாவின் ஜனாதிபதிமாற்றம் நாட்டுக்கோ உலகுக்கோ பெருமாற்றம் ஏற்படுத்துவதில்லை, கட்சியின் அதிகாரக்குழுவே அதற்குப் பொதுவான பொறுப்பை வகிக்கிறது.

எனவே இரண்டாவது தடவைஆட்சிக்குவரும் ஜனாதிபதி றீகன் தமது சத்திய சோதனையில் எதுசரி எது பிழை என்று தெளிவு பெற்று வயசிலும் அனுபவத்திலும் உலகின் அரசியல் மூதறிஞர், முதிர்ச்சி பெற்ற உலகத் தலைவர் என்ற வரிசையில் உலக சமாதானத்துக்கு உழைப்பதற்கு அரிய சந்தர்ப்பம் இது. ரஷ்யாவுடன் அணு ஆயுதப் பரிகரணப் பேச்சைத் தொடர்வதே வெற்றி விழாவாக வேண்டும்.

குபேரநாடாகிய அமெரிக்கா வளர்ச்சியடையும் நாடுகளுக்கு நிதி, தொழில் வர்த்தகம், பாதுகாப்பு போன்ற துறைகளில் பேருதவி புரிந்து வருவது தெரிந்ததே. ஆனால் இவ்விதஉதவி பாரபட்சமாக, உலகின் சமபலத்தை குழப்பி விடும் ஆயுதமாகக் இருக்கப்படாது. இருந்தால் முதலாளித்துவ சமுதாயத்தை பலப்படுத்தும் பணியில், வளர்ச்சியடையும் நாடுகள், அணிசேராக் கொள்கையை உண்மையாக ஆதரிக்கும் நாடுகளைக் கைவிடுவதாக முடியும். உலகம் இன்றுள்ள நிலையிலிருந்து மோசமான போர் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.

அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை நடவடிக்கைகள் பற்றி காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி கண்டனம் எழுப்பியிருந்தபோதும் அவர் அந்தநாட்டுக்கு எதிரானவர் அல்ல. ஆசியாவில் அமைதி நிலவ அமெரிக்காவின் நற்பணியை வலியுறுத்தி எதிர்பார்த்தவர்.

ஜனாதிபதி றீகன் இதற்கு மதிப்பு அளிக்கவல்ல பரந்த மனப்போக்குடையவர் என்று நம்பலாம்.

### பிரார்த்தனை வழிபாடு

(சாவகச்சேரி)

சுகயீன முற்றிருக்கும் தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் நலம் வேண்டியும் காலஞ் சென்ற அன்னை இந்திராவின் ஆத்மா சாந்திபெறவும்கைதடி இனிங்கித் தோட்ட கந்த சுவாமி ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை கைதடி சன சமூக நிலையங்களின் ஒன்றியத்தலைவர் சு. சண்முகவடிவேல் தலைமையில் பிரார்த்தனையும் வழி பாடும் நடைபெறும்.

# வாழும்போதே சர்வதேச புகழ்பெற்ற தமிழர் ஜி. ஜி

## இன்று 83வது பிறந்ததினம்

அரை நூற்றாண்டு காலமாக சட்டசபையிலும், பாராளுமன்றத்திலும், நீதிமன்றங்களிலும் சங்கநாதம் செய்து அரசியல், சமூக, சட்டவாழ்வில் சுடர்விட்டுப்பிரகாசித்தவர் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள். வாழும்போதே சர்வதேசப் புகழ் பெற்ற தமிழர் அவர்.

ஜி. ஜி. என்றதுமே எமக்கு ஞாபகத்துக்கு வருவது அவரது கடைசிக்காலத்தில் நடைபெற்ற ட்ரயல்-அற்-பார் வழக்கு. தமிழ்த்தலைவர்களுக்கு எதிரான இந்த வழக்கில் அவர் நிகழ்த்திய சட்டவாதம் அவசரகாலச் சட்டத்தையே செல்லுபடியற்றதாக்கியது. இனத்தாலும், மொழியாலும் ஈழத் தமிழ்மக்கள் தனியான இனம் என்பதை நிரூபித்துக்காட்டியவர் அவர்.

1902-ம் ஆண்டு நவம்பர் 8-ம் திகதி பிறந்த அமரர் ஜி. ஜி. இளமையில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும், பின்னர் கொழும்பு சென். ஜோசப் கல்லூரியிலும் கல்வி கற்றார். புலமைப்பரிசில் பெற்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கற்று எம். ஏ. பட்டதாரியானதுடன் சட்டம் படித்து பரிஸ்டராகவும்வெளியேறினார்.

சிறுபான்மை மக்களுக்கு மிகவும் தீங்கிழைக்கக்கூடிய டொனமூர் கமிஷன் சிபார்சுகளை எதிர்த்து சேர் பொன். இராமநாதன் தலைமையில் தமிழர்கள் திரண்டெழுந்த போது அவருடன் சேர்ந்து ஜி. ஜி. யும் உழைத்தார்.

1931 ல் டொனமூர் கமிஷன் சிபார்சுகளின்படிநிறுவப்பட்ட அரச சபைக்கான தேர்தலில் ''யாழ்ப்பாண வாலிபர் காங்

குஹநாதன்

கிரஸ்'' தேர்தலைப் பகிஷ்கரிக்க முடிவு செய்தபோது அதற்கெதிராகச் செயற்பட்டு, டொனமூர்திட்டத்தை எதிர்த்திடினும் அரசசபையில் இடம் பெறுதுவிட்டால் தமிழர்க்கு மேலும் தீங்கே ஏற்படுமென்பதைத் தெளிவுபடுத்தியவர் அமரர் ஜி ஜி.

1933-ம் ஆண்டு முதல் அரசாங்க சபையில் பதவிவகித்த அமரர், தமிழ்பேசும் மக்களை ஒன்றுதிரட்டி ஒரேமுகமாக நின்று போராடுவதற்காக அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியை 44-ல் ஆரம்பித்தார். அப்போதே சோல்பரிக் கமிஷனர்கள் இலங்கைக்கு வந்தனர். தமது கட்சியின் சார்பில் இக்கமிஷன்முன் தோன்றிய அமரர் ஜி ஜி. சிறுபான்மை மக்களின் நிலைமையை எடுத்து விளக்கியதுடன் சமபிரதிநிதித்துவ கோரிக்கையையும் முன்வைத்தார். இக்கோரிக்கையே ''ஐம்பதுக்கு ஐம்பது'' என்றுபிற்காலத்தில் அழைக்கப்பட்டது.

சோல்பரித்திட்டம் 1947-ல் பொதுத்தேர்தல் நடைபெற்றபோது தமிழ்க் காங்கிரஸ் ஒன்பது தொகுதிகளில் போட்டியிட்டது. சோல்பரித் திட்டம் தமிழருக்கு ஏற்புடைத்தல்ல என்ற கோரிக்கையுடன் தேர்தலில் நின்ற காங்கிரஸ் வேட்பாளர்களில் ஏழு பேர் வெற்றியீட்டியதைத் தொடர்ந்து தமிழ்பேசும் மக்களின் தனிப்பெரும் கட்சியாக தமிழ்க் காங்கிரஸ் வெளிக்கிளம்பியது. அதன் தலைவரான ஜி. ஜி. யே தமிழ் மக்களின் தன்னிகரில்லாத் தலைவராக மக்களால் அங்கீகரிக்கப்பட்டார்.

அப்போதைய பிரதமராகவிருந்த டி. எஸ். சேனநாயக்கா தமிழ்க் காங்கிரஸின் பலத்தைக்கண்டு அதன் ஒத்துழைப்

(5ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

# பிரதம நீதியரசர் சர்வானந்தா பதவிக்குரிய பண்புடையவர்

பிரதம நீதியரசர் சர்வானந்தா குருபத்தி. தெய்வ பக்தி, தேசபக்தி நிறைந்தவர்.

அவருடைய பத்திரிகைப் பேட்டியிலே:-

''எல்லாப் பெரிய மனிதர்களும் தாயினுடைய அரவணைப்பில் வளர்ந்தார்கள்'' என்று குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியது.

பிரதம நீதியரசர் சர்வானந்தா குடும்பத்திற்கு விசுவாசமாகவிருந்தவர். அதன்படி குடும்பத்திற்காக தன்னைத் தியாகம் செய்தவர்.

தாய்க்கு அடுத்தபடியாகத் தான் கல்விகற்ற பாடசாலையை நேசிப்பதாக தனது வைபவ அமர்விலே பிரதம நீதியரசர் சர்வானந்தா உணர்ச்சியுடன் குறிப்பிட்டார்.

அவரை அங்கு வரவேற்ற சட்டமா அதிபர் திரு சிவா பசுபதி தம்முடைய உரையிலேயும் இதனைக் குறிப்பிட்டு, தாமும் பிரதம நீதியரசர் சர்வானந்தாவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களே என்றும், இன்றும் அக்கல்லூரியின் மேம்பாட்டிற்கு சங்க ரீதியில் உழைத்துக் கொண்டிருக்கிறார், என்றும் குறிப்பிட்டார்

இச்சந்தர்ப்பத்தில் பிரதம நீதியரசர் சர்வானந்தா முன்னர் நீதியரசராக நியமிக்கப்பட்டபோது, யாழ். இந்துக் கல்லூரி அவருக்கு நடத்திய பாராட்டு வைபவமொன்றில் பேசிய கல்லூரி விடுதிச்சாலை அதிபர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. கே. எஸ். சுப்பிரமணியம் கூறியது இன்றும் நினைவுக்கு வருகின்றது.

அவர் அங்கு குறிப்பிட்டதாவது:

'ஒருமுறை நான் உயர்நீதிமன்றம் போயிருந்தேன் உயர் நீதிமன்ற நீதியரசர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர். அரசதரப்பில் வாதாடிய பிரபல சட்டத்தரணியும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர். எதிரிதரப்பில் வாதாடிய பிரபல சட்டத்தரணியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர். பெருமையுடன் ஆசனத்தில் அமர தெற்கே திரும்பிப் பார்த்ததும் எதிரியும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் தான்'' என்று கூறினார். உலகத்தின் ஒரு சிறிய சித்திரமே இக்கல்லூரி என்றும் அவர் குறிப்பிட்டார்.

### வெற்றி

பிரதம நீதியரசர் சர்வானந்தா சுவாமி விவேகானந்தர் விஜயம் செய்த ஒரேயொரு கல்லூரியான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றவர், லண்டன் 'மட்ரிக்' முதல் பிரிவில் சித்தியடைந்த திறமைசாலி. அவர் குடும்பத்தின் பின்னணியிலேயே பல பெரிய பிரபல சட்ட அறிஞர்கள், நீதிபதிகள், குறிப்பாக அவருடைய மைத்துனர் நீதியரசர் என். நடராஜா கே. சி, அவருடைய வாரிசாக வளர்த்தவர்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கலாநிதி எச். டபிள்யூ. தம்பையா ஆகியோரிடம் சட்டத்துறையில் பயிற்சி பெற்றவர்.

எனவே பத்திரிகையில் குறிப்பிட்டதுபோல் குடிசையிலிருந்த ஒரு கிராமவாசி வெள்ளை மாளிகைக்குப் போன ஆபிரகாம் லிங்கனின் கதை இவருக்குச் சற்றும்

(5-ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

# கல்வியில் பெரிய கணேசையர்

இற்றைக்கு ஏறக்குறைய சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் நமது யாழ் நகரிலே அறிவு, ஆற்றல்களில் மேம்பட்ட பல தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் தமிழ் மொழிக்குச்செய்த தொண்டு அளவிடற்கரிது ஏட்டுச் சுவடிகளில் இருந்த எத்தனையோ அரிய பொக்கிஷங்கள் நூல்வடிவுபெற்றன. ஆலயங்கள் தோறும் புராண படனங்களும், பிரசங்கங்களும் இடம்பெற்றன. இத்தகைய அறிஞர் பரம்பரையில் வந்தவரே வித்துவான் சி. கணேசையர் அவர்கள். இவர் இலக்கண இலக்கிய மேதையாகத் திகழ்ந்தார்.

கணேசையர் அவர்கள் தொல்காப்பியம் முதலாய சங்க நூல்களையும், பிறநூல்களையும் குறுகிய காலத்திலேகற்றுச் சிறந்த பண்டிதரானார். அதன்மேல் சில காலம் ஆசிரியராக கடமை புரிந்தார். பின்னர் சுகயீனம் காரணமாக ஆசிரியத் தொழிலைவிட்டு நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். தொல்காப்பியத்திற்கு உரை எழுதினார். இதனை ஈழகேசரி அதிபர் பொன்னையா அவர்கள்வெளியிட்டார்கள். பலரின் வேண்டுதலின் பிரகாரம் ஈழநாட்டுப் புலவர் சரித்திரம் என்னும் நூல் இவரால் எழுதி வெளியிடப்பட்டது.

புன்னாலைக்கட்டுவன் ஆயாக் கடவைப் பிள்ளையாருக்கும், வருத்தலை - மருதடி விநாயகருக்கும் அநேக திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளார். விநாயகர் ஆலயத்தின் அருகாமையில் உள்ள ஆச்சிரமத்திலேயே இவர் வாழ்ந்துவந்தார்.

இவரிடம் இலக்கண, இலக்கியம் கற்றுப் பண்டிதரானோர் பல நூற்றுக்கணக்கனோராகும் இவரது மாணாக்கர் பலர் இன்றும் சிறந்த புலவர்களாகத் திகழ்ந்து தமிழ்ப்பணி செய்து வருகின்றார்கள்.

சி. கணேசலிங்கக்குருக்கள்

# "மகாத்மா நிழலில் வளர்ந்த இந்திரா இந்தியாவின் தவப்புதல்வி"

## பாராளுமன்றத்தில் அநுரா அஞ்சலி

(இ. கந்தசாமி)

"இந்திரா காந்தியின் மரணம் முழு உலகத்துக்குமே மிகப் பெரும் நஷ்டமாகும். இந்தியாதனது தவ புதல்வியை இழந்து தவிக்கிறது. இந்தியாவின் சரித்திரத்தில், இந்திரா ஒரு பகுதியாகிவிட்டார், மகாத்மாவின் நிழலில் வளர்ந்தார். சுபாஷ் சந்திரபோஸின் சுதந்திரத் தீயில் கொழுந்துவிட்டெரிந்தார். வல்லபாய் பட்டேல், ராஜேந்திரப்பிரசாத் போன்றவர்களினுல் திட்டமிடப்பட்ட போராளியானுர். தந்தை ஜவஹர்லால் நேருவினுல் வழிநடத்தப்பட்டார்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

"ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதனில் சிறு பராயத்தில் கல்வி பயின்றுர். சுவிற்சர்லாந்தில் பின் பயின்றுர், 'ஒக்ஸ்போர்ட்' இந்திராவை அறிவாளியாக்கியது.

"பசியையும் பட்டினியையும் ஒழிக்க இந்திரா போராடினுர்.

"இந்திரா காந்தி ஒரு சர்வதேச வாதி. ஜவஹர்லால் நேருவின் லட்சியங்களையும், நோக்கங்களையும் நன்குணர்ந்து அவர்வழி சென்றவர் அவர் அணிசேரா நாடுகளின் தலைவியாக அவர் தெரிவு செய்யப்பட்டது, அவரின் கொள்கைக்குச் சான்ருக விளங்குகிறது,

"பல சர்வதேச மகாநாடுகளில் அவர் உரையாற்றும் போது நான் அவற்றை நேரில் நின்று அவதானித்திருக்கிறேன் அவர் தனது பேச்சால் சர்வ தேசத்தவர்களையெல்லாம் கவர்ந்திழுத்தார்.

"நான் பல தடவை அவரைச் சந்தித்ததை யெல்லாம் நினைத்துப் பார்க்கிறேன் கடந்த 50 ஆண்டுகளாக இந்திரா குடும்பமும் எமது குடும்பமும், ஒருவரை ஒருவர் அறிந்து வைத்திருக்கிறேம். 1960 லஇந்திராவின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த 'தீன்மூரத்தி, இல் லத்தில், ஒரு வாரத்தை கழித்தோம்.

"லண்டனுக்கு திருமதி. இந்திரா காந்தி உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு வந்த போது லண்டனில் எமது தூதரகமூலம் எனது தொலைபேசி இலக்கத்தைப் பெற்று என்னுடன் பேசினுர். நான் அவரைப் போய்ப் பார்த்தேன். சுமார் ஒரு மணிநேரம் அவர் என்னுடன் பேசினுர்.

"1977ஆம் ஆண்டு இந்திரா இந்தியப் பொதுத் தேர்தலில் தோற்கடித்து, அரசியலில் அவர் செல்வாக்கு அஸ்தமித்து விட்டது. என்று பலரும் எண்ணிக் கொண்டிருந்த போதுஅவரைச் சந்தித்தேன். ஜனதா அரசு அவரைக் கைது செய்தது. ஜனுதிபதிக் கமிஷன்முன் விசாரித்தது. ஆனுலும் அவர் மீண்டும் 1980ல் பதவிக்கு வந்தார்.

"அவரது மகன் சஞ்சேயின் மரணச் சடங்கில் இந்திராவைச் சந்தித்தேன், அவர் உணர்ச்சி வசப்படவில்லை நிதானமாக இருந்தார்.

இந்தியாவின் தவப்புதல்வியாக வாழ்ந்த அவரை இந்த நாடு போற்றி மதிக்க வேண்டும்.

## அகதிகள் முகாம் நிர்வாகி ராஜினுமா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தின் செயலாளரான திரு. க ஜீவகதாஸ் அப்பதவியிலிருந்து இராஜினுமாச் செய்துள்ளார்.

கடந்த வருடம் இடம்பெற்ற ஜூலைக் கலவரத்தினை அடுத்து ஆரம்பிக்கப்பட்ட கைதடி அகதிகள் முகாமினை நிர்வகிக்கும் பணியில் இவர் ஈடுபட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திட்டத்தின் புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக எழுந்துள்ள நிர்வாகப் பிரச்னைகள் காரணமாகவே இவர் தனது பதவியை இராஜினுமாச் செய்தார் என அறியப்படுகின்றது.

## மின்னிணைப்புக்கு 30 ஆயிரம் ரூபா

(கரவெட்டி)

வராத்துப்பளை ஈஸ்வரி அம்பாள் ஆலயம் கற்கோவளம் வீதிக்கு சுமார் 30 ஆயிரம் ரூபா செலவில் மின்னிணைப்புச் செய்யப்படவுள்ளது. இவ் வீதிக்கான மின்னிணைப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை மின்சாரசபை மேற்கொண்டு வருகிறது.

முன்னுள் புலோலி கிழக்கு கிராமோதயசபைத் தலைவரும் வராத்துப்பளை இளைஞர் நன்னெறிக்கழகத் தலைவருமான திரு, ஏ. எஸ். எஸ். திருச்செல்வம் திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு எஸ். சிவதாஸன் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும் மயிலும் ஆகியோரை மகஜர் மூலம் கேட்டிருந்ததுடன் நேரில் சந்தித்தும் இவ் வீதிக்கான மின்னிணைப்பின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் காட்டியிருந்தார். இதனையடுத்து இவ் வீதிமின்னிணைப்புக்கென பன்முகபடுத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தின் கீழ் 30,000 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை மின்சாரசபை இவ் வீதிக்கான மின்னிணைப்பை வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளைத் தற்போது மேற்கொண்டுள்ளது.

## 85ம்— ஆண்டுமுதல் பாடசாலை வகுப்பு முறைகளில் புதிய மாற்றம் செய்யப்படும்!

[கொழும்பு]

1985ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சகல பாடசாலை வகுப்புக்களின் தரங்களையும் புதிய முறையில் வகைப்படுத்த கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கமையப் பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புவரை சகல தரங்களினதும் பெயர்கள் மாற்றியமைக்கப்படும்.

1985ம் ஆண்டில் அமுலுக்கு வரும் புதிய முறை வருமாறு:- பாலர் வகுப்பு முறை இருக்க மாட்டாது. பதிலாக இவ் வகுப்பு ஆண்டு ஒன்று என்று அழைக்கப்படும்.

முதலாம் வகுப்பு - ஆண்டு 2 என்றழைக்கப்படும். 2ம் வகுப்பு - ஆண்டு 3, மூன்றும் வகுப்பு - ஆண்டு 4, நான்காம் வகுப்பு - ஆண்டு 5, ஐந்தாம் வகுப்பு-ஆண்டு 6, ஆறும் வகுப்பு - ஆண்டு 7, ஏழாம் வகுப்பு-ஆண்டு 8, 8ம் வகுப்பு-ஆண்டு 9, 9ம் வகுப்பு -ஆண்டு 1), 10ம் வகுப்பு – ஆண்டு 11, 11ம் வகுப்பு - ஆண்டு 12, 12ம் வகுப்பு - ஆண்டு !3 (பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு).

இவ்வாறு மாற்றஞ் செய்யப்பட்டிருப்பது குறித்து கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறியதாவது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எமது கல்வி அமைப்பு முறைபற்றிய குழப்பமான நிலையை நீக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது பாலர்பாடசாலை கல்வியை வகுப்பு முறைகளுடன் சேர்ப்பதில்லை. அக்கல்வியின் பின்னரே முதலாம் வகுப்பு என ஆரம்பமாகிறது. ஆனுல் புதிய அமைப்பின்படி பாலர் பாடசாலை ஒன்றில்லாமல் அப்பாலர் கல்வியும் முதலாம் ஆண்டு என்று அழைக்கப்படும். இதனைத் தொடர்ந்து வரும் வகுப்புகள் அனைத்தும் முறையே இரண்டாம் மூன்றும் ஆண்டுகள் என ஒழுங்காக குறிப்பிடப்படும்.

ஒவ்வொரு வகுப்பையும் அவ்வப்படியே சரியாகக் கொண்டு செல்லவே இந்த ஏற்பாடு என்றுர். (கி)

## பிரதம...

(4ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

பொருத்தமற்றது.

ஊர்காவற்றுறையிலுள்ள கரம்பனில்அவர்வாழ்ந்து வந்த வீடு இன்னும் மிகப் பெரிய மாளிகையாகவிருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரதம நீதியரசர் சர்வானந்தா தமிழில் ஆர்வமுடையவர். தெய்வபக்தி, தேசபக்தி நிறைந்த பெருமகன். அரசியல் புயலில் சிக்காது, சமத்துவ புத்தியுடன் வளர்ந்தவராகையால் இப்பெரும் பதவிக்கு உயர்ந்தவர்.

## வாழும்போதே...

(4ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

புடன் நாட்டை ஆளவிரும்பியதால் தமிழ்க் காங்கிரஸின் கோரிக்கைகளுக்கு அரச ஆதரவை நல்க விரும்பினுர். தமிழ் மக்களின் அங்கீகாரத்துடன் அரசில் சேர்ந்து அமைச்சராகி தமிழ்ப்பகுதிகளின் அபிவிருத்திக்கு ஆக்கமான பணிகளைச் செய்தார்.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை, வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்பன இவரது உழைப்பின் சின்னமாக மிளிருகின்றன.

ஐ நா சபையில் இலங்கைக் குழுவுக்கு தலைமைதாங்கி தமிழரின் பெருமையை உலகறியச் செய்தவர் அவர் தனது கடைசிக்காலத்தில் பிரிந்திருந்த தமிழ் இயக்கங்கள் அனைத்தையும் இணைத்து கூட்டணி உதயமாகிய போது அதில் பெரும் பங்கு வகித்தார்.

தமிழினத்துக்கு பல்வேறு வழிகளிலும் அவர் ஆற்றிய தொண்டுகள் காலத்தால் அழியாதவை.

## இலங்கைத்...

(1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

கூறியதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும்முகமாக திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் திரு ரஜீவ் காந்தியை புதுடில்லியில் சந்தித்திருந்தமை தெரிந்ததே.

## பிறவி ஊமை...

(1-ம் பக்க2ம்கலத்தொடர்ச்சி)

சாட்சியமளிக்கையில், இறந்தவர் தமது மகன் என்றும் சம்பவதினம்மாலை தான் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது துப்பாக்கிச்சத்தம் கேட்டதாகவும் வெளியில் வந்துபார்த்தபோது இருவர் ஓடியதாதகவும், அவர்களை அடையாளம் காணமுடியவில்லை என்றும் கூறினுர்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. [க]

## கச்சேரி-நல்லூர் —

(1-ம்பக்கம் 3ம்கல தொடர்ச்சி)

துப்பாக்கிச் சூட்டினுல் சேதமடைந்துள்ளது. இவரின் உறவினரான பொன்னையா பரராஜசிங்கம் என்ற 25 வயது இளைஞர், இச் சம்பவத்தின்போது காயமடைந்தார், இவரை ஆயுதப்படையினர் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

சோதனை நடத்தியபோது, அவ்வீட்டிற்குள் எவரும் இல்லை என்று கூறப்படுகிறது

அவ்வீட்டிலிருந்து ஆயுதப் படையினர் ஒரு 'ரேனியோ' யந்திரத்தைக் கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதி வீடுகளில் உள்ளவர்கள் எல்லோரும் அச்சத்தினுல் வெளியேறியுள்ளனர். அப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது, இவ்வீதியால், வாகனப் போக்குவரத்து எதுவும் நடைபெறவில்லை.

## யாழ். செயலகத்துக்கு முன்பாக நடந்த துப்பாக்கிப் பிரயோகம்

யாழ்ப்பாண அரசாங்க செயலகத்திற்கு முன்னுல் நேற்றுப் பிற்பகல் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், ஓய்வூதியகிளை பிரதம லிகிதர் தேவராசா (56 வயது) காயமடைந்தார். இவர் சாப்பிட்டபின் வந்துகொண்டிருந்தபோது காயத்திற்குள்ளானுர்.

கச்சேரி நல்லூர் வீதியில் நடந்த குண்டு வீச்சு சம்பவத்தைத் தொடர்ந்து, அவ்வீதியால் வந்துகொண்டிருந்த ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இச்சம்பவம நடந்ததாகக் கூற படுகிறது.

தொடர்ந்து குருநகர் வரை துப்பாக்கிப் பிரயோகம்நடர்த தாகவும், சனசமூகநிலையம் ஒன்றின்மீதும் சன்னங்கள்பாய்ந்த தாகவும் கூறப்படுகிறது

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கச்சேரிப் பகுதிக் கடைகள் யாவும் மூடப்பட்டன.

யாழ். நகரிலும் சில மணி நேரம் பதற்றம் நிலவியது.

யாழ். ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, கே. கே எஸ். வீதிகள் கடைகள் யாவும் பூட்டப்பட்டன.

பஸ்நிலையத்தைச்சுற்றியுள்ள கடைகளும் மூடப்பட்டு, அரை மணி நேரத்தின் பின்னர் திறக்கப்பட்டது.

## 7 வயதுச் சிறுமி காயம்

மக்கள் அச்சமடைந்து ஓடிக் கொண்டிருந்தார்கள்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போ வீட்டிற்குள் விளையாடிக்கொண்டிருந்த கோவில்வீதியைச் சேர்ந்த 7 வயது சிறுமி தர்ஷினி சண்முகராசா காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

## பூங்காவில் வெடித்த குண்டு

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவில் நேற்றுமாலை பலத்த சத்தத்துடன் குண்டொன்று வெடித்ததைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

## இந்திராவுக்கு அஞ்சலி

(மானிப்பாய்)

அன்னை இந்திராகாந்தி ஈழத்தமிழ் மக்கள் விடயங்களைச் சமாதானமாகவும், பேச்சுவார்த்தை மூலமும் தீர்ப்பதற்கு அரும்பாடு பட்டார். அத்தகைய ஒருவரை நாம் இனி என்றுகாண்போம் அவருடைய ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதே எமது சடமையாகும்.

இவ்வாறு அகில இலங்கை தமிழ் நாடகக் கலைஞர்பேரவைத் தலைவர் பல்கலைமணி க. தம்பிராசா இந்திராகாந்தியின் மறைவையொட்டிய இரங்கல் உரையின் போது கூறினுர்.

அகில இலங்கைத் தமிழ் நாடகக்கலைஞர் பேரவை மண்டபத்தில் பேரவைத் தலைவர் பல்கலைமணி க. தம்பிராசா தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. கலைமதி ந. செல்லத்துரை, கலைக்காவலர் சி. தர்மலிங்கம், திரு. ஜெயசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

## ஆண்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அஞ்சல் தொலைதொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் வரும் 11ம்திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இலங்கையர்...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

பட்ட இலங்கை நிபுணர் திரு. புண்ணியசோம, நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டார்.

திரு. புண்ணியசோம மொஸாம்பிக்கில் விவசாய ஆலோசகராகப் பணியாற்றினுர்.

அங்குள்ள விடுதலை இயக்கத்தினரால் கடத்தப்பட்ட இவர் நேற்றுமுன்தினம் மாலாவி எல்லைப்புறத்தில், ஒரு கிராமத்தில் விடுவிக்கப்பட்டார்.

## பிரபல...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

றில் ஈடுபட்டிருந்தார். இவரின் நடமாட்டம் அண்மைக் காலங்களில் கரடியனுறு பகுதியில் காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்தே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

இவர் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முதல்நாள் 8கொள்ளை முயற்சிகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பொதுமக்களுக்கும், பொலிஸாருக்குப் பலத்த தொல்லை கொடுத்து வந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் ஆயுதப் படையினர் சோதனைநடத்தினர். வாகனங்கள் பஸ்கள் சோதணைக்குட்படுத்தப் பட்டன.

## மாலையிலும் சோதனை

கச்சேரி நல்லூர் வீதியில் நேற்று மாலை ஆயுதப்படையினர் பலத்த சோதனை நடத்தினர்.

ஆயுதப்படையினர் வாகனங்களில் வந்து அப்பகுதியைச் சுற்றிவளைத்து வீடுகள்தோறும் சோதனையிட்டனர்.

இச்சம்பவத்தினுல் அப்பகுதியில் வாழும் குடும்பங்கள் நேற்று மாலை வெளியேறிக் கொண்டிருந்தன. கச்சேரி நல்லூர் வீதியில் ஆயுதப் படையினரின் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அவ் வீதியால் நேற்று மாலை வாகனப் போக்கு வரத்துகள் நடைபெறவில்லை.

யாழ்ப்பாணம் கச்சேரி பகுதியில் நடந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் யாழ் சமூகசேவை திணைக்கள வான் சேதமடைந்தது. (க-மா)

## "இந்தியாவும் இலங்கையும்
# ஒன்று சேர்ந்து பிரச்னைகளை தீர்க்க வேண்டும்" - பாராளுமன்றத்தில் பிரதமர்

(இ. கந்தசாமி)

"இந்தியாவும் இலங்கையும் ஒரே விதமான பிரச்னைகளைக் கொண்டிருப்பதால், இருநாடும் ஒன்றுசேர வேண்டும்" என்று நேற்றுப் பாராளுமன்றத்தில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா அறைக்கூவல் விடுத்தார்.

பாராளுமன்றம் நேற்றுப் பிற்பகல் கூடியது. பிரதமர் திரு. பிரேமதாசா அனுதாபப் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தார்.

இது சம்பந்தமாகப் பிரதமர் உரையாற்றினார்.

"திருமதி இந்திரா காந்தியின் மரணம் உலகத்துக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு. இதனை ஒரு பொழுதும் ஈடு செய்ய முடியாது. ஏழைமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உழைத்தவர்" என்று திரு. பிரேமதாசா கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இலங்கையும் இந்தியாவும் பயங்கரவாதப் பிரச்னையையும் பிரிவினைச் சக்திகளின் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கியுள்ளன. எனவே இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண இந்த இருநாடுகளும் ஒன்று சேர்ந்தால் பயன் அளிக்கும்.

புதிய தலைவர் ரஜீவ் தனது கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை உண்டு.

## கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் இதுவரை கிடைக்கவில்லை!

[யாழ்ப்பாணம்]

ஓட்டுமடத்தில்வைத்து இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் இதுவரை கிடைக்கவில்லையாம்.

இரு வாரங்களுக்கு முன்னர் துப்பாக்கிமுனையில் கடத்தப்பட்ட 84 சிறி 5341 இலக்க யமகா மோட்டார் சைக்கிள் ஓட்டுமடத்தைச் சேர்ந்த ரா. சிவலிங்கம் என்பவருக்குச் சொந்தமானது.

அவரது வீட்டில் வைத்தே இது கடத்திச் செல்லப்பட்டதாம்.

## ரின்மீன், பால்மா வழங்கப்பட்டது

[ஊரெழு]

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளத்தினாலும் பலத்த காற்றினாலும் பாதிக்கப்பட்ட உடுப்பிட்டி இமையாணன்பகுதிமக்களுக்கு அரசாங்கத்தினால் ரின்மீன், பால் மா, பொருட்கள் வழங்கப்பட்டன.

இமையாணன் வீரகத்தி விநாயகர் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி பொருட்கள் வழங்கும் வைபவத்தில் கிராம சேவை அலுவலர் திரு எஸ். இரத்தினசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அன்ரனாவில் இடிவிழுந்து வீடு சேதம்!

(பண்டத்தரிப்பு)

சில்லாலையிலுள்ள வீடு ஒன்றிலிருந்த ரீ. வி. "அன்ரனா" மீது இடி விழுந்ததினால் வீட்டிலுள்ள மின்சார சாதனங்கள் சேதமடைந்ததுடன் வீடும் சேதமடைந்தது.

வீட்டு உரிமையாளருக்கும் காலில் பலத்த காயம் ஏற்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் இப்பகுதியில் பலத்த மின்னல் இடிமுழக்கத்துடன் பெய்த மழையின் போதே இச்சம்பவம் நிகழ்ந்தது. சில்லாலையைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் என்பவரின் வீட்டில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரீ. வி. அன்ரனாவும் பலத்த சேதத்திற்குள்ளானது எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

## இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—23(8-11-1984)
வாரம்— வியாழன்
திதி—பூரணை இரவு 11-55 வரை
நக்ஷத்திரம்— பரணி முழு நாளும்

மேடம்:- வணிகர்கள்இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் வீணை சிந்தனையால் வேதனைப்படுவீர்கள் சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

இடபம்:- இதயம் இன்பத்தால் விம்மும் இல்லத்திலும் இனிமை தவழும் உறவினர் மத்தியில் செல்வாக்கு பெருகும்.

மிதுனம்:- ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும் எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும் வேண்டாத நடவடிக்கை மூலம் நண்பர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடும்.

கடகம்:- தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும் தாய் வழிப் பெருமையுண்டு வாகன நலனுடன் வாழ்விலும் சுகம் காணும்.

சிங்கம்:-உள்ளம் இன்பத்தால் துள்ளும் புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும் நீண்ட நாள் பிணி நிவர்த்தியாவதற்கு இடமுண்டு.

கன்னி:- சிறு விடயம் கூட இன்று சிரமமாகத் தோன்றும் உள் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும் திருப்தியற்ற தினம்.

துலாம்:- குடும்பம் இன்று கலைக் கோயிலாக மாறும் இசைத்துறையில் இன்று ஆர்வம் ஏற்படும் பிள்ளைகளினாலும் பெருமைக்கு இடம் உண்டு.

விருச்சிகம்;- ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் மாறுக இருக்கும் தொழில் துறையிலும் நட்டம் ஏற்படலாம் பொறுமை நன்று.

தனுசு:- அறிஞர்களின் சந்திப்பு இன்று அறவழியில் ஆர்வம் பிறக்கும் ஆக்கப் பணியில் கவனம் செலுத்தவும்

மகரம்:- பயன் தரும் பயணம் இன்று மேற்கொள்ளப் படலாம் பழைய நினைவுகள் தலைதூக்கும் சுவையான நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

கும்பம்:- அறிவுத் தாகம் மேலோங்கிநிற்கும் விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரலாம் எதிர்பாராத பணமும் கைக்குக் கிடைக்கலாம்.

மீனம்;- உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர் உற்சாகம்குன்றும் பிரயாணத்தின் போது பொருள் தவறக் கூடும்.

திருமலை
வே.ரவீந்திரன்

## ஊர்வலம்

(பண்டத்தரிப்பு)

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் திடீர் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வடலியடைப்பு பகுதி மக்கள் கடந்த சனிக்கிழமை மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்

வடலியடைப்பு அரசடி சன சமூக நிலையத்திலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் சித்தன் கேணி, சங்கானை தொட்டிலடி பண்டத்தரிப்பு ஆகிய இடங்களுக்கு ஊடாகச்சென்று மீண்டும் அதே இடத்தை வந்தடைந்தது. இளைஞர்கள், யுவதிகள், தாய்மார்கள். சிறுவர், சிறுமியர், ஆகியோர் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.


லக்ஸ்பிறே
நியூசிலாந்திலும்
ஒல்லாந்திலும் இருந்து
இறக்குமதியாகும் பால்மா.




நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து தருவிக்கப்பட்டு. எந்தக் கட்டத்திலும் எவர் கையும் படாமல் உங்களை நாடும் லக்ஸ்பிறே அதி நவீன இயந்திர சாதனங்களின் மூலம் அடைக்கப்படுகின்றது

லக்ஸ்பிறே கலப்பற்றதும், சுத்தமானதும் சுகாதாரமானதும் என்பது நிச்சயம்.

நாட்டின் எல்லாப்பாகங்களிலும் விற்கப்படும் லக்ஸ்பிறே எந்த இடத்திலும் ஒரே தரத்தில் உள்ளது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

இது ஒரு பொதுசன ஸ்தாபனம். இதன் பங்குதாரர்கள் இத்தீவின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏக விநியோகஸ்தர்கள்.

S. V. முருகேசு அன் சன்ஸ் 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சிற்றி மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.



நிர்வாக அதிகாரி லங்கா மில்க்ஃபுட்ஸ் (சீ.டபிள்யூ.ஈ) லிமிட்டெட், வெலிசர.

லக்ஸ்பிறே-நாட்டு மக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.

ZENITH

## அனுதாபத் தீர்மானம்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மறைவு குறித்து பாராளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுளளது.


சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30 4-45
Richard Pryor, Jackie Gleason in
The Toy
Action - Comedy

ராஜா (யாழ். நகர்)
Daily 10-30, 2-30, 4-30
HERBIE GOES TO BANANA
(Color)
A Full Lenth of Commedy Film
(முழுநீள சிரிப்புப் படம்)

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2 30 6-30
9-11-84 முதல்
முரளி-குயிலி
பூவிலங்கு

ஹரன் (யாழ். நகர்)
10-30, 2-30, 4-30, 6-30
குறிப்பிட்டசில தினங்கள் மட்டும்
BLOOD OF THE DRAGON
(பயங்கர சண்டைகள் நிறைந்த படம்)

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
Lee Van Cleef...
Ernest Bognine...
ESCAPE from NEWYORK
பிரமாண்டமான சிறைக் கூடங்களில் — திகிலும் — பரபரப்பூட்டும் இரவுளில் கைதிகள் தப்பிச்செல்லும் சாகசங்கள் மெய்சிலிர்க்கவைக்கின்றன.

லிடோ சினிமா
Daily 4 Shows
CONAN THE BARBARION

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45
MID NIGHT EXPRESS
[கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்]

வின்ஸர் (யாழ்)
10.30, 2.00, 4 30, 6.45
The Body
(புத்தம் புதிய பிரதி)
வயதுவந்தவர்களுக்கு மட்டும்
பாலியல் கல்வியை வாலிபர் முதல் வயது வந்தோர் வரை படித்துணர வேண்டிய அவசியமான திரை ஓவியம். இதுவே கடைசிமுறையாக குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் காண்பிக்கப்படுகிறது.


### போயாதினத்தை யொட்டி இன்று சினிமாக் காட்சி இல்லை

# கொழும்பில் கைதானகைதடி இளைஞர் விடுதலை!

(சாவகச்சேரி)

வெளிநாடு செல்வதற்கென கொழும்பு சென்ற கைதடி இளைஞர்கள் மூவரை அண்மையில் கைது செய்து மகர பொலிஸ் நிலையத்தில் தடுப்பு காவலில் வைத்து விசாரித்து பதினைந்து நாட்களின்பின் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட மூவரில் ஒருவரான ப. செல்லத்துரை (வயது 34) நேற்று தனது வீட்டிற்கு வந்து சேர்ந்தார் மற்ற இருவரும் கொழும்பிலிருந்து கொண்டு வெளிநாடு செல்லவுள்ளனர்.

## சிகரெட் பணம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள கூட்டுறவு ஸ்தாபனத்தின் கிளைஒன்றில் சிகரெட் விற்பனைப்பணம் கொள்ளையடிக்கப்பட்டது. (க)

## சில்லாலையில் சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை சுத்தோலிக்க சேமக்காலை சில்லாலை கிராம அபிவிருத்தி சங்கம் மேற்கொண்ட முயற்சியினால் சிரமதான மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

### இந்திராவுக்கு அஞ்சலி

## தீவுப்பகுதி கண்டிராத மௌன ஊர்வலம்

(வேலணை)

அன்னை இந்திராவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தீவுப்பகுதியின் வரலாறு காணாத மௌனஊர்வலம் புங்குடுதீவில் நடைபெற்றது. குறிகாட்டுவான்துறையில் ஆரம்பித்த சுமார் மூவாயிரம் பேர் கொண்ட இம்மௌன ஊர்வலம், பெருங்காடு, இறுப்பிட்டி, கேரதீவு ஊரைதீவு, மடத்துவெளி, ஆலடி ஊடாகப் பெருங்காடு வந்தடைந்து திறந்தவெளி அரங்கில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

ஊர்வலத்தில் தனியார் பஸ்கள் உட்படச் சுமார் நூறு மோட்டார் வாகனங்களும், ஆயிரத்திற்கு மேற்பட்ட சைக்கிள்களும் கலந்துகொண்டன. ஊர்வலம் செல்லும் இடங்கள் எல்லாம் வாழைகளையும் கறுப்புக்கொடிகளையும் வீதிகளின் இருபக்கமும் மக்கள் கூட்டத்தையும் காணக்கூடியதாக இருந்தது.

ஊர்வலம் நிகழ்ச்சிகளை வீடியோ படப்பிடிப்பாளர் படமாக்கினர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

கூட்டம் சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. அவர் தலைமை உரையில் "மனித குலத்தின் மேம்பாட்டுக்காக உழைத்து ஆசியாவிற்கு அன்னையாகப் பிரகாசித்த திருமதி இந்திராவின் திடீர் மறைவு ஈழத் தமிழ்பேசும் மக்களின் தவக்குறைவே என்றார்.

யாழ். மாவட்ட பாதிக்கப்பட்ட வர்த்தக தொழிலாளர் நலன்புரிச்சங்கச் செயலாளர் திரு. கே. ரி. கணேசலிங்கம் பேசுகையில்: "ஜனநாயகத்திற்காகவும், உலக சமாதானத்திற்காகவும் குரல் கொடுத்த அன்னை இந்திரா பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் பேசும் மக்களுக்காகக் குரல் கொடுத்து எமது நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார். அவரது மரணம் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ்மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்" என்றார்,

புலவர் ஈழத்துச் சிவானந்தன் பேசுகையில் சமாதானம், நேர்மை என்பவற்றுக்காக அயராதுபாடுபட்டவர் அன்னை இந்திரா என்றார்.

திருவாளர்கள் ஆ பொன்னம்பலம், சோ. சச்சிதானந்தன், சு. குணரத்தினம், எஸ். அன்ரனி, ப. தயானந்தன், திருவிளங்கம், எஸ். கருணாகரன் உட்பட மற்றும் பலரும் அஞ்சலி உரைநிகழ்த்தினர்.

### யாழ். மாவட்ட

## வைத்திய சாலைகளுக்கு மருந்துவகைகள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்த்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு இவ்வருட 4-வது சந்தாயத்திற்குத் தேவையான மருந்துவகைகளை லொறிமூலம் நேரடியாகக் கொண்டு சென்று விநியோகம் செய்வதற்கான ஒழுங்குகளை யாழ் பிரதேச சுகாதாரசேவைப் பணிப்பாளர் செய்துள்ளார்.

இதன்பிரகாரம் இப்பகுதியில் நிலவிவரும் மருந்துத்தட்டுப்பாடு நீங்கிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மருந்து விநியோகம் தொடர்பாக யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகம் சுற்றறிக்கையொன்றைச் சகல அரசினர் வைத்தியசாலைகளுக்கும் இவ்வாரம் அனுப்பி வைத்துள்ளது

இம்மாதம் 14-ம் திகதியன்று புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய அரசினர் வைத்தியசாலைகளுக்கும், இம்மாதம் 16-ம் திகதியன்று ஊர்காவற்றுறை, வேலணை அரசினர் வைத்திய சாலைகளுக்கும், இம்மாதம் 20-ம் திகதியன்று அனலைதீவு அரசினர் வைத்தியசாலைக்கும் இம்மாதம் 22-ம் திகதியன்று வல்வெட்டித்துறை, கரவெட்டி ஆகிய அரசினர் வைத்தியசாலைகளுக்கும், இம்மாதம் 26-ம் திகதியன்று மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு அளவெட்டி ஆகிய அரசினர் வைத்தியசாலைகளுக்கும், இம்மாதம் 28-ம் திகதியன்று சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கும், இம்மாதம் 30-ம் திகதியன்று கோப்பாய், புத்தூர், அச்சுவேலி ஆகியஅரசினர் வைத்தியசாலைகளுக்கும், அடுத்த மாதம் 4-ம் திகதியன்று வட்டுக்கோட்டை, காரைநகர், ஆகிய அரசினர் வைத்தியசாலைகளுக்கும், அடுத்த மாதம் 10 ம் திகதியன்று பருத்தித்துறை, அம்பன், மருதங்கேணி ஆகிய அரசினர் வைத்தியசாலைகளுக்கும், அடுத்த மாதம் 12-ம் திகதி கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கும், அடுத்த மாதம் 14-ம் திகதியன்று வரணி, கொடிகாமம், பளை ஆகிய அரசினர் வைத்திய சாலைகளுக்கும் மருந்துகள் விநியோகம் செய்யப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூடாரங்கள் கொள்ளை

[கிளிநொச்சி]

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் 15 சாரணர்களுக்குரிய கூடாரங்களை இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியொன்று கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## "சொந்தஊரை மறவாதவர்"

[சுழிபுரம்]

"தமிழ் பற்றும், சைவப் பற்றும் கொண்டு வாழ்ந்தவர் அமரர் திரு எஸ். எஸ். சோமசுந்தரம். மலேசியாவில் வாழ்ந்தபோதிலும் தமது சொந்தக் கிராமமான பண்ணாகத்திலுள்ள விசவத்தனை முருகன் கோவிலுக்குபல திருப்பணிகளைச்செய்து வந்துள்ளார்.

இவ்வாறு பண்டிதர் அ. ஆறுமுகம் வழக்கம்பரை அம்மன் கோவிலில்நடைபெற்ற நினைவு தின வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அமரர் எஸ். எஸ்.சோமசுந்தரம் நினைவாக அம்பாளுக்கு விஷேட அபிஷேகஆராதனைகள் நடாத்தப்பெற்றன.

## நோயாளர்கள் ஏமாற்றம்!

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் வேலை நிறுத்தத்தினால் நேற்று முன் தினம் பெருந்தொகையானவர்கள் வெளிநோயாளர் பகுதியில் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

வெளிநோயாளர் பகுதியில் துண்டுகள் வழங்கப்படமாட்டாது என அறிவித்தல் போடப்பட்டிருந்தது. பலர் துண்டுகள் தரும்படி அங்கு கடமையாற்றுபவர்களை வற்புறுத்திக் கொண்டிருந்தனர்.

அவசர நோயாளர்கள் மட்டும், வெளிநோயாளர் பகுதியில் பார்வையிடப்பட்டு, வாட்டில் அனுமதிக்கப் பட்டனர்.

கிளினிக்குகளிலும், அவசர நோயாளர் மட்டும் பார்வையிடப்பட்டனர். வாட்டிலிருக்கும் அவசர நோயாளிகளை டாக்டர்கள் பார்வையிட்டனர்.

வெளிநோயாளர் பகுதியில் நீண்டநேரம் நோயாளிகள் காத்திருந்து விடு திரும்பிச் சென்றனர். சிலர் தனியார் டாக்டர்களிடம் சென்றனர்.

## இளைஞர் விடுதலை

(பண்டத்தரிப்பு)

மாதகல் மத்தியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் சடந்த மாதம் 21ந் திகதி கைது செய்யப்பட்ட முருகையன் என்ற இளைஞன் 13 நாட்களுக்கு பின் விடுதலை செய்யப்பட்டார்.

## ஆங்கிலதினவிழா

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆங்கிலதின விழா புதன்கிழமை கல்லூரி அதிபர் திரு ஏ. சதிர்காமர் தலைமையில் நடைபெற்றது.

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

வவுனியா ஓமந்தை கோவில் குஞ்சுக் குளத்தைச் சேர்ந்த மரணசாதனமின்றி மரணித்த ஞானசேகரம் அமிர்தலிங்கத்தின் மரணச்சொத்து சம்பந்தப்பட்ட விடயத்தில்,

மரணித்தவர்

வவுனியா ஓமந்தை கோயில் குஞ்சுக் குளம் வேலுப்பிள்ளை ஞானசேகரம்பிள்ளை மறுநாமம் ஞானசேகரம்

எதிர்மனுதார்

இல தத்துவம்/526

வவுனியா ஓமந்தை கோயில் குஞ்சுக்குளம் வேலுப்பிள்ளை ஞானசேகரம்பிள்ளை மறுநாமம் ஞானசேகரம் பெண் மனோன்மணி

எதிர்வாதி.

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30-ந் திகதி

மேற்படி இலக்க தத்துவ வழக்கு இந்நீதிமன்றில் மேற்படி கூறிய மரணசாதனமின்றி மரணித்தவரின் ஆஸ்திகளை நிர்வகிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டு அதற்கேற்ப பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இதில் அக்கறையுடைய நபர் யாரேனும் 1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி குறித்த பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றனதாக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் இருப்பின் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்:
**எஸ். வி. கணேசன்,**
பதிவாளர்
வவுனியா மாவட்ட
நீதிமன்றம்.

611


சிரித்திரன்

நவம்பர் இதழ் தீபாவளி சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

★ மாத்களை சோமுவின சிறுகதை
★ சிரித்திரன் ஆசிரியரின் "குறிப்பூக்கள்",
தூவானம், சவாரித்தம்பர் இன்னும் பல
கேலிச்சித்திரங்கள், துணுக்குகள், "மகுடி"
★ பத்மநாதனின் குறுங்கதை
★ சேரனி கவிதை
★ அனந்துவின் கவிரசனை
★ திக்கவயல் எழுதும் இலக்கியச்சேது
இன்னும் பல சத்தான முத்தான அம்சங்கள்.
விலை ரூபா 3-25 தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. 3-25 முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

சிரித்திரன் 550, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(627)

# "எதிர்பார்த்த வெற்றியே!" வெற்றிக் களிப்பில் றீகன்

[வாஷிங்டன்]

''ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றி பெறுவேன் என்பது அமெரிக்க மக்கள் முன்னரே எதிர்பார்த்தமுடிவுதான்'' என்று ஜனாதிபதி திரு. றொனல் றீகன் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்து நாட்டு மக்களுக்கு ஆற்றியமுதலாவது உரையில் தெரிவித்தார்.

'ஐம்பது மாநிலங்களிலும் குடியரசுக் கட்சியே வெற்றி பெறும் என்று அமெரிக்க மக்கள்எதிர்பார்த்தனர்'என்று கூறிய ஜனாதிபதி றீகன் 'ஜனநாயகட்சி ' படுதோல்வி கண்டுள்ளது, என்று தெரிவித்தார்.

''எனது வெற்றிக்கு உதவிய அமெரிக்க மக்களுக்கு நன்றி கூறுகின்றேன்'' என்று தெரிவித்த ஜனாதிபதி றீகன், ''எனது மனைவி நான்ஸிக்கும் நன்றி கூறுகின்றேன்'' என்றும் ஜனாதிபதி றீகன் தனது முதலாவது வெற்றியுரையில் குறிப்பிட்டார்.

# தொலைபேசி மூலம் வாழ்த்துக்கூறினர்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் திரு. றீகன் அமோக வெற்றி பெற்றது குறித்து திரு. வோல்டர் மொன்டேல் திரு. றீகனுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்!

ஐம்பது மாநிலங்களில் நாற்பது மாநிலங்களின் முடிவுகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டதும் திரு. மொன்டேல், திரு றீகனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது தோல்வியை ஒப்புக்கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

''எதிர்பாராத அளவுக்கு வெற்றிபெற்றுவிட்டீர்கள். எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்று திரு. மொன்டேல் தொலைபேசியில் தெரிவித்த போது. திரு. றீகன் வாழ்த்துக்களை ஏற்றுக்கொண்டு, ''தளர்ச்சி அடையாதீர்கள். அடுத்த தேர்தலில் நீங்கள் போட்டியிடவேண்டும்'' என்று தமது வழக்கமான ஹாஸ்யத்தை அவிழ்த்து விட்டார்.

## சடலம் அடையாளம் காணப்படவில்லை

[வவனியா]

வவனியா ஆஸ்பத்திரியில், இராணுவத்தினரால் கொண்டு வரப்பட்டு சவச்சாலையில்வைக்கப்பட்ட சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

வவனியா மாவட்ட நீதிபதி ஜி எஸ். பத்தேகெதரா பிரேத பரிசோதனை நடத்துமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்துள்ளார். [க]

## யாருடையது?

யாழ். பருத்தித்துறை வீதியைச்சேர்ந்த திரு. வித்தியாகரன் என்பவர் இரண்டு காசுக் கட்டளைகளையும், திரு. செ. வரதர் என்பவர் திருநெல்வேலி திரு. குணபாலன் செல்லத்துரையின் அடையாள அட்டையையும், திரு இ. கணேசன் என்பவர் திரு யசபால அபேனுராயன என்பவரின் அடையாள அட்டையையும் திரு. ஏ. தவநேசன் என்பவர் ஆறுதிறட்புக்கள் கொண்ட திறப்புக் கோர்வையையும், கண்டுஎடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## இளைஞர்களின் சடலங்கள் உறவினரிடம் ஒப்படைப்பு

(யழ்ப்பாணம்)

உருப்பராயில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களின் பிரேத பரிசோதனை நேற்று நடைபெற்றபின்னர் சடலங்கள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

மோட்டார் சைக்கிளில் சென்றபோது க. யோகநாதன் (மல்லாகம்), த. ஸ்ரீகுமார் (உரும்பராய்) ஆகிய இரு இளைஞர்களும் பலியானுர்கள்.

இவர்களின் சடலங்கள் நேற்றுமுன்தினமிரவு யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு வைக்கப்பட்டது.

இச்சம்பவத்தின்போது காயமடைந்த மற்றொரு இளைஞரான ஸ்ரீரஞ்சன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் இறந்த நிலையில் இளைஞர் தொங்கவிடப்பட்டிருந்தார்!

(புலோலி)

வல்வெட்டித்துறை பஸ் நிலையத்துக்கு முன்பாக இனம் தெரியாத இளைஞர் ஒருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தநிலையில் தொங்கவிடப்பட்டிருந்தார்!

இச்சடலம் நேற்றுமுன்தினம் மாலை மேற்படிபஸ் நிலையத்துக்கு முன்பாக கட்டப்பட்டிருந்தது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் ஏனைய விபரங்கள்பற்றி எதுவும்தெரியவில்லை.

மரண விசாரணைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கடத்தப்பட்ட சடலம் எரிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோவிலுக்குச் சமீபமாக இடம்பெற்ற சம்பவத்தில் எரிக்கப்பட்ட வீட்டுக்குள் எரியூட்டப்பட்ட இளைஞரின் சடலத்தை, கடத்திச் சென்ற இனந்தெரியாத நபர்கள், ஆனைக்கோட்டை வெளியில்வைத்து தகனம் செய்ததாகத் தெரியவந்துள்ளது.

எடுத்துச் செல்லப்பட்ட கொலையுண்ட இளைஞரின் சடலம் அவரது உறவினர்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின்னரே தகனம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. (மா)

## இந்தக் கிராமங்களில் வீடு வீடாகச் சோதனை

[கிளிநொச்சி]

வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகியகிராமங்களில் ஆயுதப்படை பல வீடுகளைச் சோதனை செய்து வருகிறது.

பலரைக் கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை முதல் கிளிநொச்சி கந்தசாமி கோயிலுக்குமுன்பாக, கணேஷபுரம் வீதியில், 'டட்சன்' மஞ்சள்நிற வான் உருக்குலைந்த நிலையில் நிற்கிறது.

நேற்றுக்காலை இந்தக் கோயிலுக்குச் சமீபமாக உப்புக்கூட்டுத்தாபனத்துக் சொந்தமான 'ட்ராக்டர்' ஒன்று துப்பாக்கி இளைஞர்களால் கடத்தப்பட்டது.

## வான், மினி பஸ் பலத்த சோதனை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் வான்கள், மினிபஸ்கள் நேற்று பலத்த சோதனையிடப்பட்டன. 84-ம் ஆண்டு லைசென்ஸ் பெற்றிராத வான் ஒன்றை பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

நேற்றுமுன்தினமும் லைசென்ஸ் இல்லாத இரு வான்கள் பிடிக்கப்பட்டு பின் லைசென்ஸ் கட்டியபின் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டது. (க)

## இங்கும் வீட்டுக்கு வீடு சோதனை!

(புலோலி)

புலோலி, தும்பளை, வல்லைக் குறிச்சி ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் நேற்று கனரக வாகனங்களை நிறுத்தி வீடு வீடாகச் சென்று பலத்த சோதனைகளை மேற்கொண்டனர்.

மலிகைச்சந்தி, வல்லிபுரக் கோயில், உதய கதிர்காமம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி மேற்கொண்ட இச்சோதனையின்போது வீதியால் சென்றவர்களும், வாகனங்களில் பயணம் செய்தவர்களும் சோதனை செய்யப்பட்டனர்.

இச்சோதனையைத் தொடர்ந்து இப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

## இராணுவம் சோதனை

(யாழ்ப்பாணம்)

ஊறெழுப்பகுதியில் நேற்று அதிகாலை இராணுவத்தினர் அப்பகுதியால் செல்லும் வாகனங்களைச் சோதனையிட்டனர். இச்சோதனை சுமார் 2 மணித்தியாலம் வரைநடைபெற்றது.

## 'இன்ரசிற்றி' நேற்று தாமதித்து வந்தது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து புறப்பட்ட 'இன்ரசிற்றி' ரயில் நேற்று நண்பகல் 1-45க்குத் தான் வந்துசேர்ந்தது 2-45க்கு கொழும்பு நோக்கிப்புறப்பட்டது

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே நடைபெற்றுவந்த ரயில்சேவை கடந்த சிலநாட்களாகப் பாதுகாப்புக்காரணங்களுக்காக நிறுத்தப்பட்டு கிளிநொச்சிவரை நடைபெற்று வந்ததுதெரிந்ததே

நேற்றுத்தொடக்கம் மீண்டும் யாழ் கொழும்பு சேவை ஆரம்பமாகியுள்ளது.

(மா

## சரித்திர கதாநாயகன்

[1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

திரு. றொனல்ட் றீகனின் வெற்றி பெரும் சரித்திர சாதனை என்று நேற்று வர்ணித்த அமெரிக்க ஏடுகள்; 193 -ம் ஆண்டு ஜனநாயகக் கட்சி வேட்பளர் திரு. பிராங்லின் ரூஸ்வெல்ட் ஏற்படுத்திய சதனையையும் முறியடித்து விட்டது என்று தெரிவித்தன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்களில், திரு. றீகனின் வெற்றி வரலாற்று முக்கியத்துவமானது என்று லண்டன் பத்திரிகைகள் நேற்று தெரிவித்தன

''அமெரிக்க சரித்திரத்தில், இன்றைய காலகட்டத்தில், இது வரலாற்று முக்கியத்துவம் பெற்றது'' என்று லண்டன் ஏடுகள் சிறப்பித்தன.

குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. றீகன் 49 மாநிலங்கவில்வெற்றி பெற்றுளளார் 422 மாநிலப் பிரதிநிதிகளின் வாக்குகளையும் இவர் பெற்றுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒருவர் தெரிவுசெய்யப்படுவதற்கு 270 மாநிலப் பிரதிநிதிகளின் வாக்குகளைப்பெற்ருல் போதுமானது. திரு. றீகனுக்கு கிடைத்த மொத்தவாக்குகள் 3 கோடி 40 லட்சமாகும்.

இவரை எதிர்த்துப்போட்டியிட்ட ஜனநாயககட்சி வேட்பாளர் திரு. வோல்டர் மொன்டேல் ஒரு மாநிலத்தில் மட்டும் வெற்றிபெற்றுள்ளார். இவர் 26 மாநிலப் பிரதிநிதிகளின் வாக்குகளைப் பெற்றுள்ளார். இவருக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 2 கோடி 40 லட்சமாகும்

புதிய ஜனாதிபதியின் பதவிக்காலம் 1935-ம் ஆண்டு ஜனவரி 30-ந திகதி ஆரம்பமாகிறது. அமெரிக்க ஜனாதிபதியின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும். (வெ)

## நடந்து முடிந்த 41வது தேர்தல்

நேற்று முன்தினம் 6ம் திகதி நடைபெற்றதுஅமெரிக்காவின் நாற்பத்தோராவது ஜனாதிபதித் தேர்தலாகும்.

குடியரசுக் கட்சி சார்பில் திரு. றொனல்ட் றீகனும் (வயது 73) ஜனநாயகக் கட்சி சார்பில் திரு. வோல்டர் மொன்டேலும் (வயது 56) போட்டியிட்டனர்.

குடியரசுக்கட்சிதான் தற்போதைய ஆளுங்கட்சியாகும் உப ஜனாதிபதி திரு ஜோர்ஜ் புஷ், உப ஜனாதிபதி வேட்பாளராவார். ஜனநாயகக்கட்சி பிரதான எதிர்க்கட்சியாகும். திருமதி ஜெரால்டின் பெராரோ உப ஜனாதிபதி வேட்பாளராவார். வேட்பாளர்கள் அனைவரிலும் புதியவரான திருமதி பெராரோ முதலாவது பெண் உப ஜனாதிபதி வேட்பாளராகும்.

குடியரசு கட்சி வேட்பாளரும் தற்போது 41-வது ஜனாதிபதியுமாகிவிட்ட றீகன், திரைப்படத்துறை மூலம் தம்மைப் பிரபல்யமாக்கியவர். இவர் முன்னாள் பிரபல ஹொலிவூட் திரைபட நட்சத்திரமாவார்.

ஜனநாயக கட்சி வேட்பாளராகி படுதோல்வி கண்ட திரு. மொன்டேல், முன்னாள் ஜனாதிபதி கார்ட்டர் நிர்வாகத்தில் உப ஜனாதிபதியாக இருந்தவர். சட்டத்தரணியான இவர், மின்னஸோட்டா மாநிலத்தில் சட்டமாஅதிபராகவும் கடமையாற்றியவர். இவர் வெற்றிபெற்றுள்ள ஒரு மாநிலத்தில் வாஷிங்டன் மாநிலம் ஒன்ருகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 83 ஜூலை...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

○ தொழில் நிறுவன உரிமையாளர் கொலை செய்யபட்டிருந்தால், 33 ஆயிரம் ரூபா அந்தக் குடும்பத்துக்கு வழங்கப்படும்

○ நிரந்தரமான தொழிலில் இருந்த, அவர் கலவரத்தினுல் கொலைசெய்யப்பட்டிருந்தால் அவரின் குடும்பத்துக்கு 20,000 ரூபா வழங்கப்படும்.

○ கலவரத்தில் அங்கவீனர்களானவர்களுக்கு 15,000 ரூபா வழங்கப்படும்.

○ சிறுவர்களுக்கு பத்தாயிரம் ரூபா அளிக்கப்படும்.

## மரண அறிவித்தல்

### திரு. முத்துக்குமாரு சிவரத்தினம்

(விளையாட்டு அதிகாரி - கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

கலைமகளின் அன்புக் கணவரும் ஜெயந்தி, ரஞ்சினி, சிவாஜினி ஆகியோரின் அருமைத் தந்தையுமாகிய மு சிவரத்தினம் அவர்கள் காலமாகிவிட்டார் அன்னாரது பூதவுடல் ஈமக்கிரிகைகளுக்காக 8-11-84 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு 240, ஆனந்தன் வடலி வீதியிலிருக்கும் அன்னாரின் இல்லத்திலிருந்து அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

648

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tephone number 22389 - 24126.